## 16. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

கிராமத்து வயல் ஒன்றில் மக்காச்சோளம் [முத்துச்சோளம்] அமோஹமாய் விளைந்து இருந்தது.
எலிகளுக்கும் பறவைகளுக்கும் ஒரே குதியாட்டம் தான்!
ஆனால் மிகவும் விஷமுள்ள மருந்து அடித்து இருப்பதால் தலை காட்ட முடியவில்லை.
பாவம் எலிகள் பல பசியால் வாடின.
இதைப் பார்த்த கிளிக் கூட்டம் தாங்கள் கொத்திய கருதுகளை எலிகள் முன்னே போடும்.
எலிகளும் கருதுகளைக் கொறித்துச் சாப்பிடும், பசி ஆறும்
ஒரு முறை சிறுவர்கள் சிலர் கிளிகளைப் பிடிக்க வலை விரிக்க; அதில் கிளிகளும் மாட்டிக் கொண்டன.
ஆனால் ஒற்றுமை உள்ள கிளிகளோ ஒன்று பட்டுத் தங்கள் சக்தியைக் கூட்டி உயரமாக வலையுடன் பறந்து தப்பித்தன.
இதைப் பார்த்த எலிகள் நன்றி மறக்காமல் பின் தொடர்ந்து ஓடின.
ஓர் இடத்தில் கிளிகள் சோர்ந்து போய்க் கீழே இறங்கின.
எலிகளும் அங்கே வந்து, வலையைக் கொறித்துக் கிளிகளை விடுவித்தன.
உதவியை மறக்காத எலிகளைக் கிளிகள் பாராட்டின.